www.Padasalai.Net www.CBSEtips.in

FM **முதல் இடைப் பருவத் தேர்வு – 2023** காலம் : 1.30 மணி

**11** - ஆம்வகுப் **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள் : 45

I. சரியான விடையைத்தேர்வு செய்யவும் : 10 x 1 = 10

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது (அ) சமூகக் கணக்கியல் (ஆ) காரியதரிசிகளின் கணக்கியல் (இ) மேலாண்மைக் கணக்கியல் (ஈ) பொறுப்பு கணக்கியல்
2. நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
(அ) கடனீந்தோர் (ஆ) பணியாளர் (இ) வாடிக்கையாளர் (ஈ) அரசு
3. இறுதி சரக்கிருப்பு அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு (அ) முக்கியத்து மரபு
(ஆ) பண மதிப்பீட்டுக்கருத்து (இ) முன்னெச்சரிக்கைமரபு (ஈ) நிகழ்வு தீர்வு / கருத்து
4. GAAP என்பது
(அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டகணக்கியல் கொள்கைகள்
(ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டகணக்கியல் கோட்பாடுகள்
(இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டகணக்கியல் வழிமுறைகள் (ஈ) இவற்றுள் ஏதுமில்லை
5. —— என்ற இத்தாலியர், இரட்டைப்பதிவு கணக்கியல் முறையை மேம்படுத்தினார்.
(அ) ஆர்.என். கார்ட்டர் (ஆ) ஜே.ஆர். பேட்லிபாய் (இ) லூகா பாசியோலி (ஈ) முன்ரோமற்றும் பால்மர்
6. சொந்த பயன்பாட்டிற்காக உரிமையாளரால் வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகையால் ஏற்படும் நிலை........
(அ) சொத்தின் மதிப்பு குறையும், உரிமையாளரின் முதலின் மதிப்பு குறையும்
(ஆ) ஒரு சொத்தின் மதிப்பு உயரும், மற்றொரு சொத்தின் மதிப்பு குறையும்
(இ) ஒரு சொத்தின் மதிப்பு உயரும், பொறுப்புகளின் மதிப்பு உயரும்
(ஈ) சொத்தின் மதிப்பு உயரும், முதலின் மதிப்பு குறையும்
7. இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளைப்பதிவு செய்யும் போது நடவடிக்கைகள் பாதிப்பது
(அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் (ஆ) ஒரே கணக்கில், வெவ்வேறு தேதிகளில்
(இ) ஒரேகணக்கின் இரு பக்கங்களில் (ஈ) குறைந்தபட்சம் மூன்று கணக்குகள்
8. ஒரு பேரேட்டுக் கணக்கின் பற்று பத்தியின் மொத்தத்திலிருந்தும் மற்றும் வரவுப்பத்தியின் மொத்தத்திலிருந்தும் நிகரஇருப்பினை கண்டறியும் வழிமுறையைஇவ்வாறு அழைக்கலாம்.
(அ) கூட்டுதல் (ஆ) எடுத்தெழுதுதல் (இ) குறிப்பேட்டில் பதிதல் (ஈ) இருப்புக் கட்டுதல்
9. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது (அ ஆண்டு இறுதியில்
(ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில் (இ) ஒரு பருவ காலம் முடிந்ததும் ஈ) இவை ஏதும் இல்லை
10. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்? அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் (ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும் (இ) பெயரளவு கணக்குகள் மட்டும் (ஈ) அனைத்து கணக்குகளும்

II <u>எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.</u> வினா எண் 17 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும். (5 X 2 = 10)

11. கணக்கியலை வரையறு.
12. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.
13. பின்வருனவற்றிக்கானஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக.
(அ) இரண்டிற்கு மேற்பட்டகணக்குகளைப் பாதிக்கும் நடவடிக்கைகள்
(ஆ) பொறுப்புகள் குறையும் போது, சொத்துகளும் குறைதல்
14. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக.

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 6,00,0000 | = | ? | + | 1,50,000 |
| (ஆ) | 50,000 | = | 30,000 | + | ? |
| (இ) | ? | = | 3,40,000 | + | 1,60,000 |

15. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக. (அ) முதல் (ஆ) அறைகலன், (இ) சம்பளம் (ஈ) கொடுபடவேண்டிய கூலி (உ) பெற்ற தள்ளுபடி (ஊ) விற்பனை
16. இருப்பாய்வு என்றால் என்ன?
17. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்.

2016 ஜன 1 கையில் உள்ள அறைகலன் 2,000
1 அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது 4,000
30 அறைகலன் விற்றது 400

III <u>எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.</u> வினா எண் 24 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **(5 X 3 = 15)**

18. கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக.
19. கணக்கியல் தரநிலைகள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
20. இரட்டைப்பதிவு கணக்கு முறையின் விதிகள் யாவை?

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

21. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 2018 மே 1 | ............ க/கு ப<br>............ க/கு ப<br>அமுதா க/கு<br>(அமுதா நொடிப்பு நிலை அடைந்ததார் அவர் செலுத்த வேண்டிய 30000 அவருடைய சொத்துகளை விற்று ரூபாய்க்கு 80 பைசா விதம் கணக்குத் தீர்க்கப்பட்டது) | | ............<br>............ | ............ |
| 3 | ............க/கு ப<br>............க/கு ப<br>கீதா க/கு (ரூ.14,500 பெற்றுக் கொண்டு கீதாவின் ரூ.15,000 ற்கானக/கு தீர்க்கப்பட்டது) | | ............<br>............ | ............ |

22. பேரேட்டின் பயன்பாடுகள் ஏதேனும் 3 விவரி.

23. 2018, ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன. ரொக்கம் ரூ.40,000 ; சரக்கிருப்பு ரூ.50,000 ; ராம் என்பவரிடமிருந்து பெற வேண்டியது ரூ.20,000; இயந்திரம் ரூ.40,000, விஜய் என்பவருக்கு செலுத்த வேண்டியது ரூ.10,000 தொடக்கப் பதிவினைத் தருக.

24. ________ நிறுவனத்தின்__________ஆம் நாளன்றைய இருப்பாய்வு

IV **அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** (2 X 5 = 10)

25. (அ) ஜெயசீலி என்னும் தனி வணிகர் ஒரு பலசரக்கு கடையினை நடத்தி வருகிறார். 2018, ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

ஜனவரி. 1 ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது 80,000
2 வங்கியில் செலுத்திய ரொக்கம் 40,000
3 ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது 5,000
4 லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள் முதல் செய்தது 10,000
5 ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது 11,000
6 சம்பளத்தை ரொக்கமாக வழங்கியது 5,000
7 லிப்டன் நிறுவனத்திடம் கொள் முதல் செய்ததற்கான தொகை காசோலை மூலம் செலுத்தப்பட்டது
8 ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது 4,000
9 மின் கட்டணம் ரொக்கமாக செலுத்தப்பட்டது 1,000
10 நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் 300 *(அல்லது)*

(ஆ) ஆட்டோமொபைல் நிறுவனம் நடத்தும் இராணியின் ஏடுகளில் பின்வரும் விவரங்களை கணக்கியல் சமன்பாட்டின்படி பதிவு செய்க.
(i) ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ரூ.80,000
(ii) இரமேஷிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ரூ.10,000
(iii) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ரூ.6,000
(iv) கடனீந்தோருக்கு அளித்தரொக்கம் ரூ.8,000
(v) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ரூ.2,000. (vi) வாடகை ரொக்கமாக செலுத்தப்பட்டது ரூ.500

25. (அ) பின்வரும் நடவடிக்கைகளை பேரேட்டில் எடுத்து எழுதி இருப்புக் கட்டுக.
2017 ஜூன்1 ராஜா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ரூ. 50,000
6 ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ரூ. 8,000
8 தேவி என்பருக்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ. 9,000
15 ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது ரூ. 4,000
20 சாந்தி என்பவரிடம் கடனாக சரக்கு வாங்கியது ரூ. 5,000 (அல்லது)

(ஆ) சந்திரமோகன் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2017 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயார் செய்க.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| முதல் | 1,24,500 | வங்கி மேல்வரைப்பற்று | 5,800 |
| எடுப்புகள் | 2,000 | மகிழ்வுந்து | 20,000 |
| பெற்றகடன் | 7,000 | பொதுச் செலவுகள் | 2,500 |
| விற்பனை | 53,400 | கட்டடம் | 1,10,000 |
| கொள்முதல் | 40,000 | சரக்கிருப்பு | 16,200 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**+1 கணக்குப்பதிவியல் முதல் இடைப்பருவத்தேர்வு ஆக -23**
**சரியான விடை 10X1=10**

1. (ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
2. (ஆ) பணியாளர்
3. (இ) முன்னெச்சரிக்கை மரபு
4. (இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
5. (இ) லூகா பாசியோலி
6. (அ)சொத்தின் மதிப்பு குறையும் உரிமையாளரின் முதலின் மதிப்பு குறையும்
7. (அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள்
8. (ஈ) இருப்பு கட்டுதல்
9. (ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
10. (ஈ) அனைத்து கணக்குகளும்

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10**

11. **கணக்கியலைவரையறு:** அமெரிக்க கணக்கியல் கழகத்தின் கூற்றின்படி "கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவீட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும். இதன் மூலம் தகவல்களைப் பபயன்படுத்துவோர் தக்க தீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது."

12. **கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.**
ஜே. ஆர். பேட்லிபாய் அவர்களின் கூற்றுப்படி "கணக்கு ஏடுகள் பராமரிப்பு என்பது, வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்."

13. **அ)** இரண்டிற்கு மேற்பட்ட கணக்குகளைப் பாதிக்கும் நடவடிக்கைகள் - **ரூ 20000 மதிப்புள்ள சரகினை ரூ 25000 க்கு விற்பனை செய்தல்**
**ஆ)** பொறுப்புகள் குறையும் போது சொத்துக்களும் குறைதல் - **கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது ரூ 10000**

| 14.சொத்துகள் = | பொறுப்புகள் + | முதல் |
|---|---|---|
| அ) 6,00,000 = | **4,50,000** + | 1,50,000 |
| ஆ) 50,000 = | 30,000 + | **20,000** |
| இ) **5,00,000** = | 3,40,000 + | 1.60,000 |

| 15. கணக்கின் பெயர் | வகை |
|---|---|
| i) முதல் | ஆள்சார் க/கு |
| ii) அறைகலன் | சொத்து க/கு |
| iii) சம்பளம் | பெயரளவு க/கு |
| iv) கொடுபடவே கூலி | பிரதிநிதித்துவ ஆள்சார் க/கு |
| v) பெற்ற தள்ளுபடி | பெயரளவு க/கு |
| vi) விற்பனை | சொத்து / பெயரளவு க/கு |

16. **இருப்பாய்வு** என்பது, ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்து பேரேட்டுக் கணக்குகளிலும் உள்ள பற்று இருப்புகளையும் மற்றும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கைஆகும்.

**17. ப. அறைகலன் க/கு வ.**

| நாள் | விவரம் | கு பஎ | தொ | நாள் | விவரம் | கு பஎ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | இருகீ/கொ | | 2000 | 1.01 | ரொக்க/கு | | 400 |
| 30. | ரொக்க/கு | | 4000 | | **இருபகீ/இ** | | **5600** |
| | | | 6000 | | | | 6000 |

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி : 5X3=15**

18. **கணக்கியலின் பிரிவுகள்:**
**1.நிதி நிலைக் கணக்கியல்:-** நிதியியல் நடவடிக்கைகளையும், நிகழ்வுகளையும் பதிவு செய்யக் கூடியது. இது வரலாற்றுத் தன்மையுடையது. ஏற்கனவே நடந்து முடிந்த நடவடிக்கைகளை மற்றும் நிகழ்வுகளை கணக்கேடுகளில் பதிவு செய்து பராமரிப்பதே நிதிநிலை கணக்கியலாகும்.
**2.அடக்க விலைக் கணக்கியல்:-** பொருட்கள் அல்லது சேவைகளின் அடக்கவிலையைக் கணக்கிடுவதற்கு செலவு விவரங்களை சேகரித்து, பதிவு செய்து, வகைப்படுத்தி, செலவினங்களை ஒதுக்கீடு செய்வது அடக்கவிலைக் கணக்கியல் ஆகும்.
**3.மேலாண்மைக் கணக்கியல்:-** கணக்கியல் தகவல்களை நிர்வாகத்திற்கு தருவதன் மூலம் முடிவு எடுப்பதற்கும் நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளுக்கும் துணை செய்வதே மேலாண்மைக் கணக்கியல் ஆகும்.
**4.சமூகப் பொறுப்பு கணக்கியல்:-** வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் கணக்கியல் தகவல்களை சமூகத்தின் பார்வையில் வழங்குவதாகும்.
**5.மனிதவளக் கணக்கியல்:-** ஒரு நிறுவனம் அதன் மனித வளத்தில் செய்த முதலீடுகளை இனம் காணுதல், அளவிடுதல் மற்றும் அறிவித்தல் ஆகியவற்றைச் சார்ந்ததாகும்.

19. **கணக்கியல் தரநிலைகள்**
கணக்கியலில் பின்பற்றப்பட வேண்டிய கட்டமைப்பையும், விதிகளையும் கணக்கியல் தரநிலைகள் தருவதால், வெவ்வேறு நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளை ஒப்பீடு செய்ய முடிகிறது.
நிதிநிலை அறிக்கை தயார் செய்வதில், நிலைத் தன்மை, ஒப்பீட்டு தன்மை, நிறைவுத் தன்மை, மற்றும் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

கணக்கியல் கோட்பாடுகளை தரநிர்ணயம் செய்வது அவசியமாகிறது.

கணக்கியல் தரநிலைகள் என்பது கணக்கியல் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை அடையாளம் கண்டு அளவிட்டு, பதிவுசெய்து, தகவல்களை நிதி அறிக்கை வாயிலாக வெளிப்படுத்துவதற்காக, கணக்கியல் வல்லுநர் குழு அல்லது அரசு அல்லது பிற ஒழுங்காற்று அமைப்புகளால் வெளியிடப்படும் கொள்கை ஆவணங்களாகும்.

**20. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் விதிகளைத் தருக.**

| | | |
|---|---|---|
| **ஆள்சார் கணக்கு** | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| **சொத்து கணக்கு** | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வதை வரவு செய்க |
| **பெயரளவு கணக்கு** | அனைத்து நட்டங்களையும் செலவுகளையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும் ஆதாயங்களையும் வரவு செய்க. |

**21.**

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 2018 மே 1 | **ரொக்க** க/கு ப<br>**அளித்த தள்ளுபடி** க/கு<br>அமுதா க/கு | 24000<br>6000 | <br><br>30000 |
| மே 3 | ரொக்க க/கு ப<br>**அளித்த தள்ளுபடி** க/கு<br>கீதா க/கு | 14500<br>500 | <br><br>15000 |

**22. பேரேட்டின் பயன்பாடுகள்:-**

**ஒரு குறிப்பிட்ட கணக்கை பற்றிய தகவல்களை உடனடியாக பெறமுடிகிறது:-**
விற்பனை, கொள்முதல், இயந்திரம் ஒன்று ஒரு குறிப்பிட்ட கணக்கு சம்பந்தமான அனைத்து தகவல்களையும் பார்த்த உடனேயே தெரிந்து கொள்வதற்கு பேரேடு உதவுகிறது.

**வணிக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல்:-** பேரேட்டுக் கணக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளிலிருந்து கணக்குகளின் இருப்புகளை முழுவதுமாக பகுப்பாய்வு செய்யமுடியும். அதன் மூலம் வணிக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தமுடியும்.

**இருப்பாய்வுதயாரிக்கமுடிகிறது:-** பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கமுடியும். அதன் வாயிலாக, குறிப்பேடு மற்றும் பேரேட்டில் உள்ள கணக்கியல் பதிவுகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை அறிய முடிகிறது.

**23. தொடக்கப் பதிவு**

| நாள் | விவரம் | பற்றுரூ | வரவுரூ |
|---|---|---|---|
| 2018 ஜன1 | ரொக்கம் க/கு ப.<br>சரக்கிருப்பு க/கு ப.<br>ராம் க/கு ப.<br>இயந்திரம் க/கு ப.<br>விஜய் க/கு<br>**வினோதின் முதல் க/கு** | 40000<br>50000<br>20000<br>40000 | <br><br><br><br>10000<br>**140000** |

**24. வினா எண் எழுதியிருந்தால் 3 மதிப்பெண் வழங்கவும்**

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 2X5=10**

**25.அ. ஜெயசீலியின் குறிப்பேட்டுப்பதிவுகள்**

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 2018 ஜன 1 | ரொக்க க/கு ப<br>ஜெயசீலியின் முதல் க/கு | 80000 | <br>80000 |
| 2 | வங்கி க/கு ப<br>ரொக்க க/கு | 40000 | <br>40000 |
| 3 | கொள்முதல்க/கு ப<br>ரொக்க க/கு | 10000 | <br>10000 |
| 4 | ரொக்க க/கு ப<br>லிப்டன் க/கு | 80000 | <br>80000 |
| 5 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு | 11000 | <br>11000 |
| 6 | சம்பள க/கு ப<br>ரொக்க க/கு | 5000 | <br>5000 |
| 7 | லிப்டன் க/கு ப<br>வங்கி க/கு | 10000 | <br>10000 |
| 8 | அறைகலன்க/கு ப<br>ரொக்க க/கு | 4000 | <br>4000 |
| 9 | மின்கட்டணக/கு ப<br>ரொக்க க/கு | 5000 | <br>5000 |
| 10 | காப்பீட்டுமுனைம க/கு ப<br>வங்கி க/கு | 10000 | <br>10000 |

**25.ஆ. ராணியின் ஏடுகளில் கணக்கியல் சமன்பாடு**

| நடவடிக்கை | சொத்துக்கள் | | | | முதல் | வ.கட |
|---|---|---|---|---|---|---|
| | ரொக் | சரக் | அை | | | பொறு |
| தொ.தொட | +80000 | | | | +80000 | |
| **சமன்பாடு** | **+80000** | | | = | **+80000** | |
| கடன் கொ | | +10000 | | | | +10000 |
| **சமன்பாடு** | **+80000** | **+10000** | **60000** | = | **+80000** | **+10000** |
| ரொ.அ.வா | -6000 | | +6000 | | | |
| **சமன்பாடு** | **+74000** | | **+66000** | = | **+80000** | **+10000** |
| க.அ.ரொ | -8000 | | | | | -8000 |
| **சமன்பாடு** | **+66000** | **+10000** | **+6000** | = | **+80000** | **+2000** |
| ரொ.கொள் | -2000 | +2000 | | | | |
| **சமன்பாடு** | **+64000** | **+12000** | **+6000** | = | **+80000** | **+2000** |
| வா.ரொ.செ | -500 | | | | -500 | |
| **சமன்பாடு** | **+63500** | **+12000** | **+6000** | = | **+79500** | **+2000** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**26.அ.** **ரொக்க க/கு**

| | | | |
|---|---|---|---|
| முதல் க/கு | 50000 | கொள்முதல்க/கு | 4000 |
| விற்பனை க/கு | 8000 | | |
| | | **இருப்புகீ/இ** | **54000** |
| | 58000 | | 58000 |

**முதல் க/கு**

| | | | |
|---|---|---|---|
| **இருப்புகீ/இ** | **50000** | ரொக்க க/கு | 50000 |
| | 50000 | | 50000 |

**விற்பனை க/கு**

| | | | |
|---|---|---|---|
| **இருப்புகீ/இ** | **17000** | ரொக்க க/கு | 8000 |
| | | தேவி க/கு | 9000 |
| | 17000 | | 17000 |

**தேவி க/கு**

| | | | |
|---|---|---|---|
| விற்பனை க/கு | 9000 | **இருப்புகீ/இ** | **9000** |
| | 9000 | | 9000 |

**கொள்முதல் க/கு**

| | | | |
|---|---|---|---|
| ரொக்க க/கு | 4000 | **இருப்புகீ/இ** | **9000** |
| சாந்தி க/கு | 5000 | | |
| | 9000 | | 9000 |

**சாந்தி க/கு**

| | | | |
|---|---|---|---|
| **இருப்புகீ/இ** | **5000** | கொள்முதல்க/கு | 5000 |
| | 5000 | | 5000 |

**26.ஆ.** **சந்திரமோகன் என்பவரின் இருப்பாய்வு**

| **வஎ** | **விவரம்** | **பற்று** | **வரவு** |
|---|---|---|---|
| 1 | முதல் | | 124500 |
| 2 | எடுப்புகள் | 2000 | |
| 3 | பெற்ற கடன் | | 7000 |
| 4 | விற்பனை | | 53400 |
| 5 | கொள்முதல் | 40000 | |
| 6 | வங்கி மேல்வரைப்பற்று | | 5800 |
| 7 | மகிழ்வுந்து | 20000 | |
| 8 | பொதுச்செலவுகள் | 2500 | |
| 9 | கட்டடம் | 110000 | |
| 10 | சரக்கிருப்பு | 16200 | |
| | **மொத்தம்** | **190700** | **190700** |

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com